DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No.730/2018
*****

Deposition of Witness for Prosecution witness No: PW2

| | |
|---|---|
| List of Witness | : LW2 |
| Name | : **கர்ணன்** |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 03.10.2023 |

**( A3 called absent. A4 present, For A3, dispense with petition filed and allowed. )**

Solemnly affirmed by Selvi M.K.Anusha, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் தற்போது குருவிகுளம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.12.2010 ம் தேதி சங்கரன்கோவில் தாலுகா காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்த போது, காலை 09 மணியளவில் நானும், ஆய்வாளர், தலைமைக்காவலர் சக்திவேல், தலைமைக்காவலர் சின்னதம்பி பார்ட்டி சகிதம் குற்ற வழக்கு சம்பந்தமாக சங்கரன்கோவில் பஸ் நிலையத்தில் ராஜபாளையம் பஸ் நிறுத்ததில் வழக்குகள் சம்பந்தமாக கவனித்து வந்த போது சந்தேகத்திற்கு இடமாக ராஜபாளையம் பஸ் அருகில் ஊர் பெயர் கேட்டு தெரிந்த லட்சுமி என்ற பிச்சையம்மாள் என்பவர் போலிஸ் பார்ட்டியை கண்டதும் பஸ் பின்னால் மறைய சென்றவரை கூப்பிட்டு

விசாரித்த போது, கையில் ஒரு மஞ்சள் நிறபையை வைத்திருந்தவரை, அதில் என்ன இருந்தது என்பதை ஆய்வாளர் சோதனை செய்த போது, அதில் ரூ. 500 நோட்டுக்கள் ஜெராக்ஸ் மற்றும் 100 ரூபாய் கள்ள நோட்டுக்கள் வைத்திருந்தவரை இது எப்படி கிடைத்தது என்று ஆய்வாளர் விசாரித்த போது, சிவகாசியை சேர்ந்த செபாஸ்டியன் என்ற ராசேந்திரன் தனது வீட்டில் ஜெராக்ஸ் எடுக்கும் இயந்திரங்கள் வைத்திருப்பதாக கூறி அதில் 500 ரூபாய் கள்ள நோட்டுக்களை மற்றும் 100 ரூபாய் நோட்டுக்களை அவர்கள் வைத்திருந்த ஜெராக்ஸ் மிசினில் ஜெராக்ஸில் ரூபாய் நோட்டுக்களை நகல் எடுத்து கொடுத்தாக சொன்னார். மேலும் அவர்களை விசாரிக்கும் பொழுது, செபாஸ்டியன் என்பவர் மாரியப்பன், ராமநாதன் என்பவரிடம் போலியான ஜெராக்ஸ் நோட்டுகளை நல்ல நோட்டுகளாக மாற்றி தருமாறு லட்சுமி என்ற பிச்சையம்மாளிடம் சொன்னதாக ஆய்வாளர் அவர்களிடம் வாக்குமூலம் கொடுத்தார். வாக்குமூலத்தினை பதிவு செய்து அத்தாட்சி மூலம் சொ்துக்களை கைப்பற்றியும், கையில் வைத்திருந்த மொத்தம் ரூ. 3000 மதிப்புள்ள கள்ள நோட்டுக்களை அத்தாட்சியில் கைப்பற்றி பஸ் நிலையத்தில் இருந்த பொதுமக்கள் யாரும் சாட்சி கையொப்பம் இட முன் வராத காரணத்தினால் நானும், தலைமைக்காவலர் சக்திவேலும் கையொப்பமிட்டோம். பின்னர் ஆய்வாளர் அவர்கள் எங்களை விசாரிக்க நடந்ததை சொன்னோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அத்தாட்சி **அ.சாஆ.1** ஆகும். எதிரிகளுடன் நிலையம் ஆஜராகி குற்ற எண். 536/2010 சட்டப்பிரிவு 489(A) 489(b) 489(c) 489(d) ஆகிய பிரிவுகளின் கீழ் எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

**3ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**4ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**